**நவம்பர் – 12**

# TNPSC துளிகள்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசு ஆனது விஜயவாடா மற்றும் ஸ்ரீசைலம் ஆகிய நகரங்களை இணைக்கும் ‘Sky Meets Sea’ என்ற, கடலில் மிதக்கும் புதியதொரு விமானச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள பாதுகாப்புத் தளவாட நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ‘அஸ்மி’ எனப்படும் 550 இயந்திரத் துப்பாக்கிகளை இந்திய இராணுவம் தனது படையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- லடாக்கின் முதல் போலோ மைதானம் ஆனது கோஷன் டிராஸ் பகுதியில் திறக்கப் பட்டுள்ளது.
- பெங்களூருவின் முதல் எண்ணிம மக்கள்தொகைக் கடிகாரம் ஆனது கர்நாடகா மற்றும் நாட்டின் மக்கள்தொகை பற்றிய நிகழ்நேர மதிப்பீடுகளை அணுகுவதற்காக சமூகப் பொருளாதார மாற்றக் கல்வி நிறுவனத்தில் நிறுவப் பட்டுள்ளது.
- தேசியப் புலனாய்வு முகமை ஏற்பாடு செய்த இரண்டு நாட்கள் அளவிலான 'தீவிரவாத எதிர்ப்பு மாநாடு-2024' ஆனது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- இந்திய நாட்டின் திறன்பேசி சந்தையானது 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் எண்ணிக்கைகளின் அடிப்படையில் உலகளவில் இரண்டாவது பெரியச் சந்தையாகவும் மதிப்பின் அடிப்படையில் மூன்றாவது மிகப்பெரியச் சந்தையாகவும் உருவெடுத்துள்ளது.
- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் ஆனது, இந்தியாவிற்கான சுற்றுலாவை மேம்படுத்துவதற்காகவும் இந்தியாவினை மிக முக்கிய உலகச் சுற்றுப் பயண இடமாக மேம்படுத்துவதற்காகவும் இலண்டனில் நடைபெற்ற உலக சுற்றுப் பயணச் சந்தை நிகழ்ச்சியில் (WTM) பங்கேற்றது.
- சமோவா நாடானது 27வது காமன்வெல்த் அரசு தலைவர்கள் கூட்டத்தினை (CHOGM) 'One Resilient Common Future: Transforming our Commonwealth' என்ற ஒரு கருத்துருவில் நடத்தியது.


# தமிழ்நாடு செய்திகள்

## திருநெல்வேலி – புத்தொழில் நிறுவனங்களின் மையம்

- திருநெல்வேலியானது தற்போது வளர்ந்து வரும் தொழில் முனைவோர் சூழல் அமைப்பிற்கான கவனத்தை ஈர்த்து வருகிறது.
- கடந்த சில ஆண்டுகளாக, இந்தப் பகுதியில் இருந்து அதிகமான பெண்கள் அவர்களின் தடைகளை உடைத்து, புத்தொழில் சூழல் அமைப்பில் நுழைந்துள்ளனர்.
- திருநெல்வேலி மண்டல மையத்தில் 405 புத்தொழில் நிறுவனங்கள் இருந்தன.
- இதில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்கள் அடங்கும்.
- இங்கு பெண்களை இணை நிறுவனர்களாகக் கொண்ட 88 புத்தொழில் நிறுவனங்கள்

உள்ளன.

❖ சுமார் 43% புத்தொழில் நிறுவனங்கள் பெண்களால் நிறுவப்பட்டது அல்லது இணைந்து நிறுவப்பட்டது.




## 2024 ஆம் ஆண்டில் தீவிர வானிலை நிகழ்வுகள்

**South Peninsula region**

It recorded extreme weather events on **168** of the **274** days, which claimed **762** lives, damaged **425.62K** ha of crop area

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Kerala | 113 | 550 | 4,717 | 0 | 4,881 |
| Karnataka | 96 | 60 | 83,605 | 50 | 2,493 |
| Tamil Nadu | 67 | 25 | 1,039 | 14 | 189 |
| Andhra Pradesh | 60 | 60 | 262,840 | 501 | 85,806 |
| Telangana | 50 | 66 | 73,418 | 4,350 | 0 |
| Puducherry | 19 | 1 | 0 | 0 | 0 |
| Andaman & Nicobar | 9 | 0 | 0 | 0 | 0 |
| Lakshadweep | 3 | 0 | 0 | 0 | 0 |



❖ தமிழ்நாடு மாநிலத்தில் இதுவரை 67 தீவிர வானிலை நாட்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் தீவிர வானிலை நிகழ்வுகளில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை இம்மாநிலம் எதிர்கொண்டுள்ளது.

❖ இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 27 நாட்களை விட கிட்டத்தட்ட இருமடங்காகும்.

❖ இந்தக் கூர்மையான அதிகரிப்பு ஆனது பருவநிலை இந்தியா 2024 என்ற அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

❖ இந்த தீவிர வானிலை நிகழ்வுகளால் சுமார் 25 மனித உயிரிழப்புகள், 14 கால்நடை உயிரிழப்புகள் மற்றும் 149 வீடுகள் சேதம் போன்றவை பதிவாகியுள்ளன.

❖ சீரற்ற மழைப்பொழிவு, கடுமையான வெப்ப அலைகள் மற்றும் புயல் உருவாக்கம் காரணமாக தமிழகத்தில் 1,039 ஹெக்டேர் பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது.


❖ 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், 274 நாட்களுள் 255 நாட்களில் இந்தியா தீவிர வானிலையை எதிர்கொண்டுள்ளது.

- இது முந்தைய இரண்டு ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தீவிர வானிலைப் பதிவான நாட்களின் எண்ணிக்கையை மிஞ்சுகிறது.

# தேசியச் செய்திகள்

## PM-வித்யா லட்சுமி திட்டம்

- ஆண்டிற்கு சுமார் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பயனளிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரதமர்-வித்யாலட்சுமி திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, "நிதிக் கட்டுப்பாடுகள் ஆனது எந்தவொரு மாணவரையும் உயர் கல்வியைத் தொடர்வதைத் தடுக்கக் கூடாது என்பதற்காகத் தகுதியுள்ள அனைத்தும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்க உள்ளது".
- சுமார் 7.5 லட்சம் ரூபாய் வரையிலான கடனைப் பெற முயலும் மாணவர்களுக்கு, நிலுவையில் உள்ள 75 சதவீத கடனுக்கான உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கும்.
- ஆண்டு வருமானம் 8 லட்சம் ரூபாய் வரையில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 10 லட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு மூன்று சதவீத வட்டி மானியம் பெற உரிமை வழங்கப்படும்.
- அமைச்சகத்தின் உயர்கல்வித் துறையானது, PM-வித்யாலட்சுமி என்ற ஒருங்கிணைந்த இணைய தளத்தினை அமைக்க உள்ளது.
- இதன் மூலம் மாணவர்கள் கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் அனைத்து வங்கிகளிலும் வட்டி மானியம் பெறலாம்.




## AMU தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- சிறுபான்மை சமூகத்தினால் நிறுவப்பட்ட இந்தக் கல்வி நிறுவனம் ஆனது சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப் பட்டவுடன் அதனது அடையாளத்தை இழக்காது என்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அறிவித்தது.
- 1967 ஆம் ஆண்டில் S. அஜீஸ் பாஷா மற்றும் இந்திய ஒன்றியம் இடையிலான வழக்கில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பை மனுதாரர்கள் எதிர்த்து வழக்குத்

தொடுத்தனர்.

- AMU (அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகம்) ஒரு மத்திய பல்கலைக்கழகம் என்றும், அதனைச் சிறுபான்மை நிறுவனமாக கருத முடியாது என்றும் அந்த அமர்வு கூறி இருந்தது.
- மத சிறுபான்மையினரால் நிறுவப்படாத கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை என்றும், அரசியலமைப்பின் 30(1)வது சரத்தின் கீழ் அவர்கள் அதற்கான பாதுகாப்பைக் கோர முடியாது என்றும் அது கூறியது.
- சரத்து 30(1) ஆனது மத மற்றும் மொழிவாரி சிறுபான்மையினர் தங்கள் சொந்த கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிப்பதற்கான உரிமையை நிலைநிறுத்துகிறது.
- 1875 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட AMU பல்கலைக்கழகத்தின் சிறுபான்மை அந்தஸ்து ஆனது, 1981 ஆம் ஆண்டு AMU (திருத்தம்) என்ற சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தால் மீண்டும் வழங்கப்பட்டது.




## 3வது MAHASAGAR உச்சி மாநாடு




- இந்தியக் கடற்படையானது உயர்நிலைப் பெரும் மெய்நிகர் தொடர்பு நிகழ்ச்சியான மூன்றாவது MAHASAGAR உச்சி மாநாட்டினை நடத்தியது.
- MAHASAGAR என்பது பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் செயல்பாட்டில் உள்ள பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான கடல்சார் தலைமைகள் என்பதைக் குறிக்கிறது.

- வங்காளதேசம், கொமொரோஸ், கென்யா, மடகாஸ்கர், மாலத்தீவுகள், மொரீஷியஸ், மொசாம்பிக், செஷல்ஸ், இலங்கை மற்றும் தான்சானியா ஆகிய இந்தியப் பெருங் கடல் பிராந்தியத்தின் கடல்சார் முகமைகள் மற்றும் சில மூத்தத் தலைவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, 'Training Cooperation to Mitigate Common Maritime Security Challenges in IOR' என்பதாகும்.

### எண்ணிம வாழ்வு சான்றிதழ் பிரச்சாரம் 3.0

- தென்மேற்கு இரயில்வே (SWR) நிர்வாகமானது எண்ணிம வாழ்வு சான்றிதழ் பிரச்சாரம் 3.0 என்பதைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் வாழ்க்கைச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய முன்னெடுப்பு இதுவாகும்.
- இந்தப் புதிய பிரச்சாரம் ஆனது அவர்களின் ஓய்வூதியத்தைத் தொடர்வதற்காக நேரம் மற்றும் முயற்சி இரண்டையும் மிச்சப்படுத்தி, இயங்கலையில் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வழி வகுக்கிறது.





## சர்வதேசச் செய்திகள்


### தென் கொரியாவில் அல்லுலோஸ்

- தென் கொரிய நாடானது அல்லுலோஸ் என்ற செயற்கை இனிப்பூட்டிக்கானச் சிறந்த சோதனைக் களமாக மாறியுள்ளது.
- இது ஸ்டீவியா போன்ற சர்க்கரை மாற்றுகளுக்கு சாத்தியமான போட்டியாக திகழும்.
- அத்திப்பழம், கிவி மற்றும் இன்ன பிற பழங்களில் இயற்கையாகவே காணப்படும், அல்லுலோஸ் அமெரிக்க மற்றும் தென் கொரிய நாட்டு கட்டுப்பாட்டு அமைப்புகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது சர்க்கரையைப் போல 70% இனிப்பு கொண்டது மற்றும் கலோரி இல்லாதது.
- ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா ஆகிய நாடுகள், பாதுகாப்பு குறித்த மதிப்பீடு மேலும் தேவைப் படுகின்ற ஒன்று என்பதால் "ஒரு புதுமையான உணவு" என்று இதனை வகைப்படுத்தியுள்ளன.

- நீண்ட கால ஆபத்துக்களை குறிப்பிட்டுக் காட்டி எடைக் கட்டுப்பாட்டிற்கு சர்க்கரை அல்லாத இனிப்புகளைப் பயன்படுத்துவதற்கு எதிராக உலக சுகாதார அமைப்பு இந்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.




## லெவோடோபி லக்கி லக்கி





- இந்தோனேசியாவின் லெவோடோபி லக்கி லக்கி எரிமலையானது ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக வெடித்துள்ளது.
- லெவோடோபி லக்கி லக்கி என்பது கிழக்கு நுசா தெங்கரா மாகாணத்தின் கிழக்கு ஃபுளோரஸ் மாவட்டத்தில் உள்ள ஓர் இணை சூழல் வடிவ எரிமலைகளில் ஒன்றாகும்.

- அவை கணவன்-மனைவி மலைகள் என்று உள்நாட்டில் அறியப்படுகின்றன.
- “லகி லகி” என்றால் ஆண் என்றும், அதன் துணை லெவோடோபி ஆனது பெரெம்புவான் அல்லது பெண் என்றும் பொருள்படும்.
- லெவோடோபி லக்கி லக்கி இந்தோனேசியாவில் மிக நன்கு செயல்பாட்டில் உள்ள 120 எரிமலைகளில் ஒன்றாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## உளுந்து மற்றும் துவரை இறக்குமதி 2024

- இந்தியாவின் உளுந்து (உரட்) மற்றும் துவரை (துர்) இறக்குமதிக்கான ஒரு முக்கிய ஆதாரமாக மாறும் சாத்தியக் கூறினைப் பிரேசில் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 4,102 டன்னாக இருந்த உளுந்து இறக்குமதியின் அளவு தற்போது அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் அக்டோபர் மாத இறுதி வரை இது 22,000 டன்னாக இருந்தது.
- நடப்பு ஆண்டில் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கான ஆஸ்திரேலியாவின் கொண்டைக் கடலை உற்பத்தியானது சுமார் 13.3 லட்சம் டன்களாக மதிப்பிடப் பட்டு உள்ளது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் 4.9 லட்சம் டன்களாக இருந்தது.
- உள்நாட்டுப் பற்றாக்குறையைச் சமாளிக்க இந்தியா ஆண்டுதோறும் 3-4 மில்லியன் டன்கள் வரையிலான பல்வேறு வகையான பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## செவ்வாய்க் கிரகத்தில் ஆதிகாலக் கடல்

- சீனாவின் ஜுராங் உலாவிக் கலத்தின் சமீபத்திய கண்டுபிடிப்புகளானது, செவ்வாய்க் கிரகத்தில் ஒரு காலத்தில் கடல் இருந்ததாகக் கூறுகிறது.
- வண்டல் படிவுகள், மண் எரிமலைகள் மற்றும் பள்ளங்கள் ஆகியவை கடந்த காலத்தில் அங்கு ஒரு பெரிய நீர்நிலை இருந்ததை சுட்டிக்காட்டுகின்றன.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது செவ்வாய்க் கிரகம், ஒரு காலத்தில் மிகவும் வெப்பமான வளிமண்டலத்துடன் கூடிய வாழக் கூடிய கிரகம் என்ற கோட்பாட்டை ஆதரிக்கிறது.
- சுமார் 3.68 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உடோபியா பிளானிஷியா நீரினால்


சூழப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

- அந்தக் கடல் சுமார் 3.42 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து விட்டதாகத் தெரிகிறது.
- நமது சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற கோள்களைப் போலவே செவ்வாய்க் கிரகமும் சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## IUCN அமைப்பின் முதல் உலகளாவிய மரங்கள் மதிப்பீடு





- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) அழிந்து வரும் உயிரினங்களின் செந்நிறப் பட்டியலின் புதுப்பிப்பின் போது முதல் உலகளாவிய மரங்கள் மதிப்பீடு ஆனது வெளியிடப்பட்டது.
- இதன் கண்டுபிடிப்புகள் ஆனது உயிரிப் பன்முகத்தன்மை உடன்படிக்கையின் 16வது பங்குதாரர்கள் (COP16) மாநாட்டில் அறிவிக்கப்பட்டன.
- உலகில் உள்ள மர இனங்களில் சுமார் 38 சதவீதம் ஆனது தற்போது அழிவை எதிர் நோக்கி வருவதாக இந்த மதிப்பீடு கண்டறிந்துள்ளது.
- பகுப்பாய்வு செய்யப்பட்ட 47,282 மரங்களில் குறைந்தது 16,425 மரங்கள் அழியும் ஒரு

அபாயத்தில் உள்ளன.

- உலகின் மிகவும் உயர்ந்த மரங்கள் பன்முகத்தன்மை கொண்ட தென் அமெரிக்காவில், மதிப்பிடப் பட்ட 13,668 இனங்களில் 3,356 மர இனங்கள் ஆபத்தில் உள்ளன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தற்போது 166,061 இனங்கள் உள்ளன, அவற்றில் 46,337 அழியும் அபாயத்தில் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக சூரிய சக்தி அறிக்கைத் தொடர் - 3வது பதிப்பு




- 3வது உலக சூரிய சக்தி அறிக்கைத் தொடரானது சமீபத்தில் சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியின் 7வது கூட்டத்தில் வெளியிடப்பட்டது.
- உலக சூரிய சக்தி சந்தை அறிக்கை, உலக முதலீட்டு அறிக்கை, உலகத் தொழில்நுட்ப அறிக்கை மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கான பசுமை ஹைட்ரஜன் மீதான தயார் நிலை மதிப்பீடு ஆகிய 4 அறிக்கைகள் புதிதாக வெளியிடப் பட்டுள்ளன.
- உலக சூரிய சக்தி சந்தை அறிக்கையானது, 2000 ஆம் ஆண்டில் 1.22 GW ஆக இருந்த உலகளாவிய உற்பத்தி திறன் ஆனது 2023 ஆம் ஆண்டில் 1,418.97 GW ஆக உயர்ந்து உள்ளதுடன் அதிகபட்ச சூரிய சக்தி அதிகரிப்பினை வெளிப்படுத்துகிறது.
- சமீபத்திய உலக முதலீட்டு அறிக்கையானது, 2018 ஆம் ஆண்டில் சுமார் 2.4 டிரில்லியன் டாலராக இருந்த ஆற்றல் முதலீடுகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் சுமார் 3.1 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ளதுடன் நிலையான ஆற்றலை நோக்கிய பெரும் உலகளாவிய மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.
- உலகத் தொழில்நுட்ப அறிக்கையின் சிறப்பம்சங்களில் சூரிய ஒளி மின்னழுத்த (PV)

தொகுதிகளில் ஒரு சாதனை அளவிலான சுமார் 24.9% செயல்திறன், 2004 ஆம் ஆண்டு முதல் சிலிக்கான் பயன்பாட்டில் 88% குறைப்பு ஆகியவை அடங்கும்.

# மாநிலச் செய்திகள்

## ரந்தம்பூர் தேசியப் பூங்காவில் மாயமான புலிகள்

- இராஜஸ்தானின் ரந்தம்பூர் தேசியப் பூங்காவில் 25 புலிகள் "காணவில்லை" என்று சமீபத்திய அறிக்கை கூறுகிறது.
- ஒரு குழு அமைக்கப்பட்ட பிறகு, மூன்று நாட்களுக்குள் 10 புலிகள் கண்டுபிடிக்கப் பட்டன.
- இதற்கு முன்பு 2019 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 13 புலிகள் மாயமாகி இருந்தன.
- 2022 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சுமார் 88 புலிகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டு உள்ளதுடன், அங்கு புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ரந்தம்பூர் இட நெருக்கடியினை எதிர்கொண்டு வருகிறது.




# முக்கிய தினங்கள்

## உத்தரகாண்ட் மாநில உருவாக்க தினம் - நவம்பர் 09

- உத்தரகாண்ட் மாநிலம் ஆனது 2000 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் உத்தராஞ்சல் என்று அழைக்கப்பட்ட இந்த மாநிலம் இந்தியாவின் 27வது மாநிலமாக மாறியது.
- இதன் பெயர் அதிகாரப்பூர்வமாக 2007 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் என மாற்றப் பட்டது.
- இது பொதுவாக 'தேவ பூமி' அல்லது 'கடவுளின் நிலம்' என்று குறிப்பிடப்படுகிறது.

- இது கலாச்சாரம், புவியியல் மற்றும் நிர்வாக வேறுபாடுகள் காரணமாக உத்தரப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப் பட்டது.




## உலக குழந்தைத் தத்தெடுப்பு தினம் - நவம்பர் 09




- குழந்தைத் தத்தெடுப்பின் முக்கியத்துவம் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையில் அது ஏற்படுத்தும் ஆழமான தாக்கம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இதில் ஆதரவற்றவராக, கை விடப் பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தத்தெடுப்பு ஆனது இரண்டாவது வாய்ப்பை வழங்குகிறது.
- இந்தியாவின் குழந்தைத் தத்தெடுப்பு செயல்முறையானது, மத்தியத் தத்தெடுப்பு வள

ஆணையத்தால் (CARA) நிர்வகிக்கப்படுகிறது.

- இந்தியாவில் தத்தெடுப்பிற்காகக் காத்திருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் தத்தெடுப்புக்குக் கிடைக்கப் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை வெகு குறைவு ஆகும்.


### உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் தினம் - நவம்பர் 10




- இது சமூகத்தில் அறிவியலின் பங்கையும், மேலும் அறிவியல் சார் பிரச்சினைகளில் தீவிரமாக விவாதம் செய்ய மக்களை ஈடுபடுத்த வேண்டியதன் ஒரு அவசியத்தையும் எடுத்துக் காட்டுகிறது.
- இது முதலில் 1999 ஆம் ஆண்டில் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற உலக அறிவியல் மாநாட்டின் போது முன்மொழிய ப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Why Science Matters - Engaging Minds and Empowering Futures' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

### ஒரே நேரத்தில் வேளாண்மை மற்றும் சூரிய சக்தி உற்பத்தி




- இந்தியாவானது சர்வதேச சூரிய சக்தி கூட்டணி சபையில் சூரிய ஆற்றல் உற்பத்தியை வேளாண்மையுடன் இணைப்பதில் தனது யோசனைகளை எடுத்துரைத்தது.

- அக்ரிவோல்டாயிக் என்ற ஒரு வேளாண்மை முறையானது முதன்மையாக நிலத்தை வேளாண்மை மற்றும் சூரிய சக்தி உற்பத்தி ஆகிய இரண்டிற்கும் ஒரே நேரத்தில் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த முறையில், சூரியசக்தி உற்பத்தி தகடுகள் ஆனது பயிர்களுக்கு மேலே நிறுவப் பட்டு, வேளாண்மை மற்றும் ஆற்றல் உற்பத்தி ஆகிய இரண்டிற்கும் நிலத்தைப் பயன்படுத்த வழிவகை செய்யபடுகிறது.
- இது நில உற்பத்தியை அதிகப்படுத்தவும், சில பயிர்களுக்கு நிழல் தரவும் மற்றும் மண்ணின் ஈரப்பத இழப்பைக் குறைக்கவும் உதவுகிறது.
- இந்த முறையானது வேளாண்மையின் நெகிழ் திறன் மற்றும் உற்பத்தித் திறனை - குறிப்பாக குறைந்த விளை நிலங்கள் உள்ள சில பகுதிகளில் - மேம்படுத்தும் அதே வேளையில் நிலையான ஆற்றல் மாற்றத்தை ஆதரிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★